## சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை – தஞ்சாவூர் மாவட்டம் – 2004–ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நடைபெற உள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகரைச் சுற்றியுள்ள அரசு சாலைகள் மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை மேம்பாடு செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலைத் (எச்.ப்பி1) துறை

அரசாணை (நிலை) எண்.202 நாள் :25.9.2003

படிக்கவும்

1.தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத்துறை கடிதம் எண்.. 53790/சாலை2/2003– 2 நாள் 12.6.2003 மற்றும் 11.8.2003.

2.தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத்துறை கடிதம் எண்.1239/வி.எஸ்..2/2003– நாள் 5.9.2003

-----

ஆணை:–

2003–2004–ஆம் ஆண்டிற்கான நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கையின் போது, கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகருக்குள்ளும் மற்றும் நகரைச் சுற்றியும் உள்ள அரசு சாலைகளை ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அறிவிப்பு செய்யப்பட்டது.

2.பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை அவர்கள் கும்பகோணம் நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள அரசு சாலைகள் மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை ரூ 1.50 கோடி செலவினத்தில் மேம்பாடு செய்ய அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். சாலைகளின் விவரம் இவ்வாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

3. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் செயற்குறிப்பை ஏற்று, கும்பகோணம் மகாமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அரசு சாலைகள் மற்றும் மாவட்ட பெரிய சாலைகளை மேம்பாடு செய்ய, ரூ. 1.50 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட தொகைகளுக்கு கீழ்கண்டவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

**1) அரசு சாலைகள்**

இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ.1,34,80,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கீழ்க்கண்ட தலைப்பின் கீழும்

5054 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 03 மாநில நெடுஞ்சாலைகள் 11) மாநில நெடுஞ்சாலைகள் – 337 சாலை பணிகள் பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – (II மாநில திட்டம்) JA மூலப்பணிகள் – 16 பெரும்பணிகள் (டி.பி.சி. எண். 5054–03 337–JA–1608)

2) மாவட்ட பெரிய சாலைகள்

ரூ. 6,20,000/- (ரூபாய் ஆறுலட்சத்து இருபதாயிரம் மட்டும்) (கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழும் பற்று வைக்கப்பட வேண்டும்.

5054 –சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 04 மாவட்ட சாலைகளும் ஏனைய சாலைகளும் 800 ஏனைய செலவு பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள். (II மாநில திட்டம்) JA மாவட்ட நெடுஞ்சாலைகள் – 16 பெரும்பணிகள் (டி.பி.சி. எண். 5054–04 –800 – JA –1604).

5. இச்செலவினம் ஒரு புதுப்பணி, (New Service) குறித்த செலவீனமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியில் (Contingentcy fund) இருந்து முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவையான முன்பணத்தை பெற உரிய விண்ணபப்த்தினை இவ்வரசாணை நகலுடன் நிதி (வரவு செலவு பொது 1) துறைக்கு விண்ணபிக்குமாறு தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலைத் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இத்தொகையினை துணை மதிப்பீடுகளில் (Supplementary Entrameter) சேர்பதற்கான குறிப்புகளை (Notes) உரிய நேரத்தில் அனுப்புமாறு அவர்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண். 51532/பொதுப்பணி–I/03 நாள் 24.9.2003– படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 504.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ். ஸ்ரீபதி,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத்துறை, சென்னை–5
மாநில கணக்காய்வு தலைவர் , சென்னை–18/35
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்,
நிதி (பொதுப்பணி) வ.செ.பொது,2 துறை மற்றும் நிதி /வ.செ.பொ.2/ சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

அரசாணை (நிலை) எண். 202, நெடுஞ்சாலைத் துறை நாள் 25.9.2003.

<u>மாநில அரசு சாலைகள்</u>

| வ. எண் | மேம்பாடு செய்யப்படும் சாலையின் பெயர் | நீளம் கி.மீ.–இல் | செலவீனம் |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் – குடவாசல் –கும்பகோணம் சாலை கி.மீ. 30 /8 – 37/2 | 6.40 | 57.60 |
| 2. | கும்பகோணம் மன்னார்குடி அதிராம்பட்டிணம் சாலை கி.மீ. 3/8 – 5/8 | 2.00 | 18.00 |
| 3. | கல்லனை – காவேரிப்பட்டிணம் சாலை கிமீ59/2 –62/ 4 | 3.20 | 27.30 |
| 4. | கல்லனை – காவேரிப்பட்டிணம் சாலை கிமீ 73/4–75/0, 59/2 – 62/4 | 1.60 | 8.50 |
| 5. | கும்பகோணம் – சீர்காழி சாலை கி.மீ. 5/6 – 9/2 | 3.60 | 32.40 |
| | மொத்தம் | 16.80 | 143.80 |

<u>மாவட்ட பெரிய சாலைகள்</u>

| வ .எண் | மேம்பாடு செய்யப்படும் சாலையின் பெயர் | நீளம் கி.மீ.–இல் | செலவீனம் |
|---|---|---|---|
| 1. | சாமி மலை அணுகு சாலை கிமீ 0/0– 0/02 | 0.20 | 0.90 |
| 2. | கும்பகோணம் கொள்ளிடக்கரை சாலை கி.மீ. 4/8 – 5/8 | 1.00 | 5.30 |
| | ‘மொத்தம் | 1.20 | 6.20 |
| | ஆக மொத்தம் | 18.00 | 150.00 |

(ரூபாய் நூற்று ஐம்பது இலட்சம் மட்டும்)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.